1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அண்மையிலேதான் அங்கே பிரசவத்திற்கும் அறுவை சிகிச்சைக்குமாக 30 படுக்கை கொண்ட வார்டு ரூ. 2,95,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் குடும்ப நலத் திட்ட அடிப்படையில் அறுவை சிகிச்சைக்கு ஒரு வார்டு 20 படுக்கையோடு ரூ. 2,00,000 செலவில் கட்டி முடிக்கப் பட்டிருக்கிறது. அதேபோல் தோல் வியாதிக்கும்; இன உறவு காரணமாக ஏற்படுகிற வியாதிக்கும், 'டெட்டனஸ்' வியாதிக்கும் அதேபோல் குழந்தைகளுக்கான சிகிச்சைத் தேவைகளுக்காக 40 படுக்கைகளோடு ரூ. 1,65,000 செலவில் ஒரு வார்டு கட்டப் படுகிறது. அநேகமாக கட்டப்பட்டிருக்கும். இதற்கான சுற்றுச் சுவர் ரூ. 60,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல பகுதிகளை விரிவாக்க ஆலோசனை இருக்கிறது. நிதி வசதிக்கேற்ப அவ்வப்போது விரிவாக்கப்படும்.

* 106 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழந்தை அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ரூ. 1,81,000 செலவில் 32 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி கட்டவும், ரூ. 30,000 செலவில், காது, மூக்கு, தொண்டைப் பகுதிக்காக ஒரு சிகிச்சைப் பகுதி கட்டிடம் கட்டவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ் வேலைகள், பொதுப்பணித் துறையினரால் விரைவில் தொடங்கப்படும்.

Post Graduate course in Orthopaedics

* 107 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Post-Graduate course in Orpthopaedics is being conducted in the Medical Colleges in this State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) டி. ஆர்த்தோ (D. ORTHO) என்ற மேல் பட்டப் படிப்பில் தகுதிப் பட்டயப் படிப்பும், எம்.எஸ். (M. S.) முடவியல் மருத்துவம் என்ற பட்ட மேற்படிப்பும் சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்தப் படிப்பு வேறு கல்லூரிகளிலே ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சிறப்புத் தகுதிகள் பெற்ற, அதற்குரிய தகுதிகள் உள்ள பேராசிரியர்கள் பலர் இருக்கின்ற இடங்களிலேதான் இந்தப் படிப்பை உருவாக்க முடியும். ஸ்டான்லி மருத்துவ மனையிலே இதை உருவாக்க வேண்டுமென்ற கருத்து பரிசீலிக்கப்பட்டு அது பல்கலைக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. வந்ததற்குப் பின்னால் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இந்தப் படிப்பு அங்கே அமைக்கப்படக்கூடும்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போஸ்ட் கிராஜுவேட் டிகிரிஸ் பொறுத்தவரையில், பி.யூ.சி. படித்ததற்குப் பிறகு எம்.பி., பி.எஸ். ஐந்தாண்டுக் காலம் படித்து விட்டு அதற்குப் பின்னாலே ஹவுஸ் சர்ஜனாக இருந்து அதற்குப் பின்னாலே போஸ்ட் ஹவுஸ் சர்ஜனாக இருந்து அதற்குப் பின்னாலே ஸ்பெஷல் டிகிரி பெறவேண்டிய நிலைமை இருப்பதால் அவர்கள் இதையெல்லாம் முடித்துவிட்டு வேலைக்கு வருகிறபொழுது ஏறத்தாழ பாதி வயது வந்து விடுகிறது. சீப் ஆவதற்கு முடியாமல் சிலபேர்கள் ரிடையர் ஆகிவிடுவதால் அந்த நேரத்திலே சிலபேர்கள் வயதை மாற்றி, தங்களின் ஜாதகத்திலே இருக்கின்ற முறைப்படி வயதைக் காட்டி சர்டிபிகேட்டிலே வயதை மாற்றி இரண்டு அதிகாரிகள் விண்ணப்பித்து வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேனே, அது உண்மைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வி முடவியல் மருத்துவம் பற்றியது. கல்லூரியிலே இப்படிப்பட்ட படிப்பு சொல்லித்தரப்படுகிறதா என்பது. ஜாதகத்திலே பல குறைபாடுகள் இருக்கலாம். பல பேர்களுடைய ஜாதகம் எனக்குத் தெரியாது. அவரவர்கள் ஜாதகத்தைக் காட்டி ஆதாரங்களைத் தெரிவித்திருந்தால் முறைப்படி அவை பரிசிலிக்கப்பட்டிருக்கும்.

Kancheepuram Drainage Scheme.

* 108 Q.—THIRU R. R. MUNUSAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Water Supply and Drainage Board has executed a drainage scheme at Kancheepuram: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(இ) காஞ்சிபுரம் வடிகால் திட்டத்தை நிறுவுவதற்காக ரூ. 105.44 லட்சம் செலவும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.22 லட்சம் பேணுதல் நடைமுறைச் செலவும் ஆகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு அரசு 1970 ஜூன் திங்களில் ஒப்புதல் வழங்கியது. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் கடனுதவி பெற்று தமிழ்நாடு நீர் வழங்கு-வடிகால் வாரியம் இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே கழிவுநீர் வாரியம் அமைப்பதுபோல் என்னுடைய கோட்டத்திலுள்ள திண்டிவனம் போன்ற இடங்களிலே வடிகால் இல்லாததால் போதுமான சுகாதார வசதிகள் இல்லை, இதனால் மக்களின் சுகாதாரம் கெடுகிறது. எனவே தமிழகத்தின் மற்ற நகராட்சிகளிலும் குடிநீர் வாரியம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நகராட்சி மன்றங்களிலே வடிகால் வாரியம் அமைக்கப்பட்டால், மன்றங்களைக் கழுவிவிடு வதற்குத்தான் அவை பயன்படும். நகராட்சியின் பகுதிகளில் வடி கால் வசதிகள் இல்லையென்றால், அதைச் செய்ய வேண்டுமென்று